# முதல் பருவத்தேர்வு – 2023

## தொகுத்தறி மதிப்பீடு – சமூக அறிவியல்

**வகுப்பு – 7** **மதிப்பெண்கள் : 60**

**கால அளவு : 2 மணி நேரம்**

**I. சரியான விடையைத் தேர்ந்தெடுத்து எழுதுக.** 5 × 1= 5

1. அரேபியாவில் பிறந்து இந்தியாவிற்கு வந்த மொராக்கோ நாட்டு அறிஞர் _______ ஆவார்.
   அ. மார்கோ போலோ ஆ. அல் – பரூனி
   இ. டோமிங்கோ பயஸ் ஈ. இபன் பதூதா
2. குத்புதீன் தனது தலைநகரை _______ லிருந்து டெல்லிக்கு மாற்றினார்.
   அ. லாகூர் ஆ. புனே
   இ. தௌலதாபாத் ஈ. ஆக்ரா
3. 'மத்திய தரைக்கடலின் கலங்கரை விளக்கம்' என அழைக்கப்படும் எரிமலை _____________
   அ) ஸ்ட்ராம்போலி ஆ) கரக்கடோவா
   இ) பியூஜியாமா ஈ) கிளிமஞ்சாரோ
4. அரசியல் கட்சிகளை அங்கீகரிக்கும் அமைப்பு
   அ) தேர்தல் ஆணையம் ஆ) குடியரசுத் தலைவர்
   இ) உச்ச நீதிமன்றம் ஈ) பாராளுமன்றம்
5. கீழே கொடுக்கப்பட்டுள்ள வாக்கியத்தை கருத்தில் கொண்டு சரியானதைத் தெரிவு செய்க.
   **கூற்று** : வேலைப் பகுப்பு முறையில் உழைப்பாளி ஒருவர் திறமையுடையவராக இருக்கிறார்.
   **காரணம்** : ஒரே வேலையை மீண்டும் மீண்டும் செய்வதனால்.
   அ) காரணம் கூற்றுக்கான சரியான விளக்கமே.
   ஆ) காரணம் கூற்றுக்கான சரியான விளக்கமல்ல.
   இ) கூற்று சரி, காரணம் தவறு.
   ஈ) கூற்று தவறு, காரணம் சரி.

**II. கோடிட்ட இடங்களை நிரப்புக.** 5 × 1=5

6. _____________ இல் சிந்துவை அரேபியர் கைப்பற்றினர்.
7. பாண்டியப் பேரரசின் அரசு செயலகம் _____________ என அறியப்பட்டது.
8. உலகின் மிக நீண்ட கடற்கரை _____________ ஆகும்.
9. தேர்தலில் போட்டியிடும் உரிமை என்பது _____________ உரிமை ஆகும்.
10. _____________ என்பது மனித உற்பத்தியில் ஓர் இடு பொருள்.

**III. பொருத்துக:** 5 × 1 = 5

| | | |
|---|---|---|
| 11. கோனார்க் | – | சீனா |
| 12. துக்ரில் கான் | – | ஆடம் ஸ்மித் |
| 13. வேம்பநாடு ஏரி | – | வங்காள ஆளுநர் |
| 14. ஒரு கட்சி | – | ஒடிசா |
| 15. நாடுகளின் செல்வம் | – | காயல் |

**IV. சரியா? தவறா?** 6 × 1 = 6

16. பள்ளிச்சந்தம் என்பது சமண சமய நிறுவனங்களுக்குக் கொடையாக வழங்கப்பட்ட நிலமாகும்.
17. 'ராஜபுத்ர' என்பது ஒரு லத்தீன் வார்த்தை ஆகும்.
18. ரஸியா திறமை மிக்க, மன வலிமை கொண்ட போர்வீரர்.
19. உன் உடன் பிறந்த சகோதரர்/சகோதரி இங்கிலாந்தில் குடியுரிமை பெற்றுள்ளார். எனவே அவர்/அவள் காக்கச இனத்தைச் சார்ந்தவர்.
20. சட்டத்தின் ஆட்சி என்ற பதத்தை, ஏ.வி.டைசி என்ற பிரிட்டிஷ் சட்ட வல்லுநர் வாதுரைத்தார்.
21. நமது நாட்டின் மொத்த உள்நாட்டு உற்பத்தியில், பெரும்பங்கு வகிப்பவை முதல் நிலைத் துறைகளே.

**V. கீழ்க்காணும் வினாக்களுக்கு ஏதேனும் ஏழு வினாக்களுக்கு விடை தருக.** 7 × 2=14

22. வரலாற்றை அறிந்து கொள்வதற்கான இருவகைச் சான்றுகளைக் கூறுக.
23. கன்னோஜின் மீதான மும்முனைப் போராட்டம் குறித்து எழுதுக.
24. மன்னர்கள் காலத்தில் தங்க, வெள்ளி நாணயங்கள் வெளியிடப்பட்டன. தற்பொழுது தங்க, வெள்ளி நாணயங்கள் வெளியிடப்படுவதில்லை ஏன்?
25. 'சகல்கானி' குறித்து சிறு குறிப்பு வரைக.
26. நிலநடுக்கம் வரையறு.
27. குதிரைக் குளம்பு ஏரி எவ்வாறு உருவாகிறது?
28. நகர்ப்புற குடியிருப்புகள் எதன் அடிப்படையில் வகைப்படுத்தப்படுகின்றன?
29. குடிமை சமத்துவம் என்றால் என்ன?
30. குறிப்பு வரைக: கூட்டணி அரசாங்கம்
31. பயன்பாட்டின் வகைகளை எழுதுக.

**VI. விரிவான விடையளிக்கவும்.** 3 × 5=15

32 அ) சிந்துவை அரேபியர் கைப்பற்றியதன் தாக்கங்கள் யாவை? (ஏதேனும் ஐந்து குறிப்பிடவும்)

**அல்லது**

ஆ). 1398 ஆம் ஆண்டில் நடைபெற்ற தைமூரின் படையெடுப்பை விவரி.

33. அ) எரிமலை வெடிப்பின் அடிப்படையில் அதன் வகைகளை விளக்குக.

**அல்லது**

ஆ) **வேறுபடுத்துக:**

i) கிளையாறு மற்றும் துணையாறு

ii) பெருநகரம் மற்றும் நகரம்

**காரணம் தருக:** கடல் குகைகள் கடல் தூண்களாக மாறுகின்றன.

34. அ) நீ ஒரு அரசியல் கட்சித் தலைவரானால், உனது கட்சியின் தேர்தல் அறிக்கையில் கொடுக்கும் வாக்குறுதிகளைப் பட்டியலிடுக.

**அல்லது**

ஆ) மூலதனத்தின் சிறப்பியல்புகளை விளக்குக.

**VII. 35. கீழ்க்காணும் இடங்களை இந்திய வரைபடத்தில் குறிக்கவும்** 5 × 1=5

i) டெல்லி ii) கன்னோஜ் iii) பாலர்கள் iv) மதுரை v) பம்பாய்

36. **கீழ்க்காணும் இடங்களை உலக வரைபடத்தில் குறிக்கவும்** 5 × 1=5

i) பசிபிக் நெருப்பு வளையம் ii) இந்தியா iii) மவுண்ட் கிளிமஞ்சரோ

iv) ஆஸ்திரேலியா புவிதட்டு v) அட்லாண்டிக் பெருங்கடல்


இந்திய வரைபடம்
68°
72°
76°
80°
84°
88°
92°
96°
36°
32°
28°
24°
23½°
20°
16°
12°
8°
N
Scale 1:16,500,000 1 cm = 165 kms

# உலக வரைபடம்

